செய்யா விட்டால் பற்றாக்குறையாக இருக்கிற சேலம், தர்மபுரி மாவட்டம் என்று போய் பிறகு கொஞ்சம் தாண்டினால் கேரளம் என்று வந்து விடுகிறது அப்படிப் போகிற போது அதிகமாக விளைச்சலைத் தருகிற தஞ்சை மாவட்டமே வறட்சிக்கு உள்ளாக வேண்டிய ஒரு கட்டத்தை உண்டாக்கி விடுகிறார்கள். ஆகவே, அந்தந்த மாவட்டங்கள் வாடாமல் இருக்க வேண்டும். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயம் கிடைத்தது போக உபரி மற்ற மாவட்டங்களுக்குப் போகலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் மாவட்டமான வடாற்காடு மாவட்டத்தைக் கூட ஓரளவு உபரி மாவட்டமாக உள்ளதை வறட்சி மாவட்டமாக ஆக்கி விடுவார்கள் இடம் கொர்டுத்தால் ஆகவே கட்டுப்பாடு செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

அச்சிறுப்பாக்கத்திலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்.

(159—*வினா எண். 17780)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : விற்பனைக் கூடம் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. விளைச்சல் பாதிக்கப் பட்டதால் வரத்துக்கள் இல்லை.

நிலக்கோட்டைத் தொகுதியில் உள்ள புறம்போக்கு நிலம்

(160—*வினா எண். 17861)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தொகுதியில் தண்ணீர் வசதியோடு கூடிய புறம்போக்கு நிலம் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அம்மாதிரியான இடங்களில் விவசாயப் பண்ணை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS